மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோவில்பட்டி.
முன்னிலை- செல்வி.P.S.A. நிஷாந்தினி B.C.A.,B.L.,(Hons.)
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ஆம் நாள், வெள்ளிக்கிழமை.
அசல் வழக்கு எண்.14/2016
------

கொம்புமாடத்தி ..வாதி

/எதிர்/

1.இஸ்ரவேல்
2.செல்லப்பாண்டி
3.கன்னியம்மாள்
4.சுப்பு ..பிரதிவாதிகள்

இவ்வழக்கில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சத்தியநாராயணன், அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கதிர்வேல், அவர்களும் ஆஜராகி இருந்துவந்துள்ள நிலையில், இன்று வழக்கானது விசாரணைக்காக பட்டியலில் இடப்பட்டிருந்த நிலையில் வாதி தரப்பில் வழக்கினை நடத்த தயாராக இல்லாத நிலையில் வாதியை அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் வாதியின் வருகையின்மை காரணமாக இன்று இவ்வழக்கில் வழங்கும்

தீர்ப்புரை

பிராது 2வது தபசில் சொத்து வாதிக்கே தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், பிராது 2வது தபசிலில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எந்தவிதமான இடைஞ்சலும் செய்யக்கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், 1வது தபசிலின் ஒருபகுதியான 2வது தபசிலில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை கனம் நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவுக்குள் பிரதிவாதிகள் அகற்றி வாதிவசம் காலி சுவாதீனம் ஒப்படைக்கவும் அவ்வாறு பிரதிவாதிகள் செய்ய தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றமே பிரதிவாதிகள் ஸ்தானத்தில் இருந்து 2வது தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதி வசம் காலி சுவாதீனம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு செயலுறுத்துக்கட்ளை பரிகாரம் பிறப்பிக்கும் படிக்கும், மற்றும் வழக்கு செலவுத் தொகையும் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*2)* *இவ்வழக்கு இன்று விசாரணைக்காக பட்டியலில் இடப்பட்டிருந்தது. வாதி தரப்பில் வழக்கினை நடத்த தயாராக இல்லை. வழக்கின் விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை. வாதியை அழைத்தும் ஆஜரில்லை. வழக்கு வாதியின் வருகையின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

ஒம்/-P.S.A. நிஷாந்தினி

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்,</u>**
**<u>சான்றாவணங்கள்-</u>** இல்லை.

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்,</u>**
**<u>சான்றாவணங்கள்-</u>** இல்லை.

ஒம்/-P.S.A. நிஷாந்தினி
மா.உ.நீ.,
கோவில்பட்டி.

.

மா.உ.நீ.,கோவில்பட்டி
அ.வ.எண்.14/2016
வரைவு/நேரிய தீர்ப்புரை
நாள்25.01.2019.